**Revised**

**செய்தி வெளியீடு எண்:2303** **நாள்: 20.12.2022**

**செய்தி வெளியீடு**

**சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடுக்குப்பம் பகுதியில் புறக்காவல் நிலையத்தை திறந்து வைத்தார்.**

சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (20.12.2022) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–120க்குட்பட்ட நடுக்குப்பம் பகுதியில் பொதுமக்களின் பங்களிப்புடன் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புறக்காவல் நிலையத்தினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) திரு.நே.சிற்றரசு அவர்கள், மண்டலக்குழுத் தலைவர் திரு. எஸ்.மதன்மோகன் அவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in